கிறோம். அக்குழுவில், அனுபவமிக்க தலைமை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இதற்கும் ஒரு குழு போய் ஆய்வு செய்கின்ற நிலைமையை நாம் உருவாக்கலாம்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : பேரவைத் தலைவரவர்களே மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் திரு. கோவை செழியன் சமீபத்திலே கோவையிலே பேசும்பொழுது பிளஸ் 2 வகுப்புளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஜூனியர் கல்லூரிகள் வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது இங்கே சட்டமன்றத்தில் பிளஸ் 2 தொடர்ந்து நடக்குமென்றும் ஜூனியர் கல்லூரிகள் ஏற்படுத்த உத்தேசம் இல்லையென்றும் தெரிவித்தார்கள். ஆகவே 'மாநிலத் திட்டக் குழு கொள்கைக்கும், மாநில அரசு கொள்கைக்கும் இந்தக் கல்வித் துறையிலே முரண்பாடு இருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் என்ன பேசினார் என்ற விவரம் என்னிடத்திலே இப்பொழுது இல்லை. ஒருவேளை, அவர் தன்னுடைய சொந்தக் கருத்தைக் கூறியிருக்கலாம். ஆனால், தமிழகத்திலே இப்பொழுது நாம் நடைமுறைப் படுத்துகிற இந்த முறைதான் சிறந்த முறை என்ற கருத்து இருப்பதால், எல்லா மாநிலங்களிலும் இம்முறையைக் கொண்டு வரவேண்டுமென்ற அடிப்படையிலேதான் மத்திய கல்வி அமைச்சர் ஒரு மசோதாவை பார்லிமென்டின் இந்த தொடர் கூட்டத்திலே கொண்டுவர இருக்கிறார்கள். பல்கலைக் கழக மானியக் குழு கூட இன்னும் இரண்டு ஆண்டு காலத்திற்குள்ளாக எல்லா இடங்களிலும் மாற்றி, இந்த வகுப்புகளை உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கொண்டு போக வேண்டுமென்ற கருத்தை தெரிவித்திருக்கிறது.

*வினா எண். 487—திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலுள்ள தேசியக் கல்லூரி மேல்நிலைப் பள்ளி நிர்வாகத்தினர் மேல்நிலைப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியரை நியமித்ததில் கல்வித் துறையின் 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15 ஆம் தேதியிடப் பெற்ற 1091 ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப் பெற்றுள்ள விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்பது உண்மையா ?

(ஆ) அந்த பதவி நியமனத்திற்கு திருச்சிராப்பள்ளி மாவட்டக் கல்வி அதிகாரி ஏற்பளிக்கவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம் மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

1979 மார்ச் 20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) பாதிக்கப்பட்ட தலைமை ஆசிரியர் செய்த மேல்முறையீட்டின் பேரில் இணை பள்ளிக் கல்வி இயக்குநர் அவரை மீண்டும் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராக நியமிக்க ஆணையிட்டார். அதன்படி அவர் அப்பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பணியேற்றுள்ளார்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக அங்கே இருக்கிற ஒரு அஸிஸ்டெண்ட் சுப்பிரமணியம் என்பவருக்குத்தான் சட்ட விரோதமாக பிரமோஷன் கொடுக்கப்பட்டது. இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட ஆசிரியர் அப்பீல் ஒன்றை ஜாயிண்ட் டைரக்டர் இடத்தில் கொடுத்தார். ஜாயிண்ட் டைரக்டர் அந்த பிரமோஷனே இல்லீகல் என்று சொன்னார். அப்படி இருந்தும் அந்த அஸிஸ்டெண்ட் சர்டிபிகேட் கொடுக்கிறார். சம்பள பில்லில் கையெழுத்து இடுகிறார். இப்படி எல்லாமே இல்லீகலாகவே நடந்து கொண்டிருக்கிறது. எப்பொழுது இந்த பிரமோஷன் இல்லீகல் என்று ஜாயின்ட் டைரக்டரே சொல்லி விட்டாரோ நீங்கள் ஏன் அவரை இதற்கெல்லாம் அனுமதிக்கிறீர்கள். Why is it not stopped? What action has been taken against the administration?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட தலைமை ஆசிரியர் இணை பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அப்பள்ளி நிர்வாகத்தினரின் உத்தரவை எதிர்த்து முறையீடு செய்துள்ளார். அம்முறையீட்டின் மீது இணைப் பள்ளி கல்வி இயக்குநர் பரிசீலனை செய்து திரு. ஆர். சுவாமிநாதன் அவர்களை மீண்டும் நேஷனல் காலேஜ் மேல் நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராக நியமனம் செய்யும்படி நேஷனல் காலேஜ் பள்ளிக் குழுவிற்கு தனது 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 8-ம் நாளிட்ட நடவடிக்கையில் உத்தரவிட்டார். அவ்வாணையின்படி அத்தலைமையாசிரியர் திரு. ஆர். சுவாமிநாதன், நேஷனல் காலேஜ் மேல் நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராக 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 3-ம் நாளன்று பதவியேற்று பணி புரிந்து வருகிறார். இது எனக்குத் தரப்பட்டிருக்கிற தகவல்கள். வேறு ஏதாவது தவறுகள் நடந்திருந்தால் அது குறித்து விசாரித்து ஆலோசிக்கப்படும்.

Talakudi Panchayat.

* *Q.* No. 488—THIRU J. JAMES: Will the Hon'ble the Minister for Local Administraion be pleased to state:

(*a*) whether the Government has received any representation from the President, Talakudi Panchayat in Kanyakumari District regarding certain irregularities of the Executive Officer; and

(*b*) what is the action taken by the Government?